**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069888

C

1. District மாவட்டம் : VELLORE
PS: காவல்நிலையம் : VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.
Year ஆண்டு : 2020
FIR No. மு.த.அ. எண் : 11/2020
Date நாள் : 30-10-2020.

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION — Sections பிரிவுகள்: 7 OF P.C. Act 1988 as
(ii) Act சட்டம்: Act 1988 as amended by — Sections பிரிவுகள்: amended by the P.C
(iii) Act சட்டம்: P.C. (Amendment) Act 2018. — Sections பிரிவுகள்: (Amendment) Act 2018. and 102 Cr.P.C.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் : —
Date to : நாள் வரை : Prior to 29-10-2020 at 19.50 hrs.
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 29-10-2020
Time நேரம் : 18.30 hrs. and 19.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : VOLUME-II 2020.
Time நேரம் : 19.00 hrs. On 29-10-2020.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : SOUTH DIRECTION — 10 KMS.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி : TASMAC SHOPS No: 11340 & 11120, No: 5/1, AMIRTHI MAIN ROAD, PENNATHUR, VELLORE TALUK, VELLORE DISTRICT.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : KRISHNAMOORTHY
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : THULASI
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1971
(d) Nationality : நாட்டினம் : INDIAN
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : DISTRICT INSPECTION CELL OFFICER,
(g) Address : முகவரி : DISTRICT INSPECTION CELL OFFICE, VELLORE COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) V. SRINIVASAN (48/2020) S/o Veerasamy, Supervisor, TASMAC SHOP No. 11340, Pennathur, Vellore District. (2) S. RUDHRAMOORTHY (24/2020) S/o Srinivasan, Supervisor, TASMAC SHOP No. 11120 Pennathur, Vellore. (3) K. RUDHRAMOORTHY, Salesman, TASMAC SHOP No. 11120, Pennathur, Vellore, (4) A. SATHYAKUMAR, Salesman, TASMAC shop No. 11120, (5) K. JOTHI, Salesman, TASMAC SHOP No. 11340, (6) E. BALAMURUGAN, SALESMAN, TASMAC SHOP No. 11339 & 11340, Pennathur, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : "NO DELAY"

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/10/2020 | [signature] 30/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.10.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 18.30 hrs.

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ........
VIGILANCE & ANTI CORRUPTION
VELLORE.

**SUBMITTED:**

இன்று 30.10.2020-ஆம் தேதி மாலை 16.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.T.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.T.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், பொருள்: திடீர் ஆய்வு சோதனை – வேலூர் மாவட்டம் வேலூர் தாலுக்கா பென்னாத்தூர் கிராமத்தில் அமிர்தி செல்லும் சாலையில் உள்ள அரசு மதுபானவிற்பனை கடை எண்.11340 மற்றும் கடை எண்.11120 ஆகியவற்றில் 29.10.2020 அன்று இருதுறை திடீர் சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம், ஆவணம் மற்றும் செயல்முறை – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். நேற்று 29.10.2020-ஆம் தேதியன்று மாலை 18.30 மணியளவில் நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, வேலூர் தாலுக்கா பென்னாத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மதுபானக்கடை Nos.11120 மற்றும் 11340 ஆகியவற்றில் ஒரு குவார்ட்டர் பாட்டிலின் மீது ரூ.5/- அதிகமாக விலை வைத்தும், பீர் பாட்டிலின் மீது ரூ.10/- அதிகமாக விலை வைத்தும் TASMAC Shop சூப்பர்வைசர்கள் மற்றும் சேல்ஸ்மேன்கள் மதுபானங்களை விற்பனை செய்வதாகவும், 30.10.2020-ஆம் தேதியன்று மிலாடிநபி பண்டிகை முன்னிட்டு அரசு மதுபானக்கடைகள் இயங்காது என்பதால், மதுபானங்களை கள்ள சந்தைக்கு அதிகப்படியான விலைக்கு மொத்தமாக விற்பனை செய்வதாகவும், அந்த அரசு மதுபானக்கடைகளில் வெளிநபர்களை டாஸ்மாக் கடையில் வேலைக்குவைத்து மதுபாட்டில்களை விற்பனை செய்வதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் எனது நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு மாலை சுமார் 19.00 மணிக்கு தெரியப்படுத்தி அதன் தொடர் நடவடிக்கையாக 29.10.2020-ஆம்தேதி இரவு சுமார் 19.50 மணியளவில் என்னுடைய தலைமையில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரின் உதவியுடன் பென்னாத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மதுபானக்கடைகள் எண்.11340 மற்றும் 11120-கு சென்று சேர்ந்து அரசு மதுபானக்கடை எண்.11120 மற்றும் அரசு மதுபானக்கடை எண்.11340-ல் ஆஜரில் இருந்த மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர்களிடம், இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் அறிமுகப்படுத்திக்கொண்டு, TASMAC Shop No.11340-ல் திடீர்

சோதனை செய்ய மேற்படி கடையின் மேற்பார்வையாளர் திரு.V.சீனிவாசன், விற்பனையாளர்கள் திரு.K.ஜோதி மற்றும் E.பாலமுருகன், தனிநபர்கள் R.மணிகண்டன் மற்றும் S.சரவணன் ஆகியோர் இருந்தனர். இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனைக்கு உதவிட திருமதி.கீதாராணி, Deputy Collector / District Manager, TASMAC, வேலூர் மாவட்டம், வேலூர் அவர்களை தொடர்பு கொண்டு அரசு மதுபானக்கடைகளில் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடைபெறும் தகவல் சொல்லி, உடனே வரும்படியும், மதுபான வரவு செலவு கணக்குகளை பார்க்க TASMAC அலுவலகத்தில் இருந்து அலுவலர்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் சோதனைக்கு உதவிட மதுபானக்கடையின் இருப்பு சரிபார்க்க திரு.R.விநாயகம், திரு.B.ராஜேந்திரன் மற்றும் திரு.R.பாஸ்கரன் ஆகிய மூன்று இளநிலை உதவியாளர்கள், வேலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்திலிருந்து வந்து ஆஜரானார்கள். திரு.R.விநாயகம், திரு.B.ராஜேந்திரன் ஆகியோர் மதுபானக்கடை எண்.11340 கடையில் உள்ள இருப்பை சரி பார்க்கவும், திரு.R.பாஸ்கரன் என்பவர் மதுபானக்கடை எண்.11120 கடையின் கணக்கை சரிபார்க்க கேட்டுக்கொள்ளப்பட்டு சோதனை தொடரப்பட்டது. கடை எண்.11340-ல் சோதனை மேற்கொண்டதில் கல்லாவில் மதுபாட்டில்களை விற்பனை செய்தவகையில் வரப்பெற்ற பணம் இருந்தது. 29.10.2020 இரவு சுமார் 23.00 மணிக்கு திருமதி.கீதாராணி, Deputy Collector / District Manager, TASMAC, வேலூர் மாவட்டம், வேலூர் அவர்கள் பென்னாத்தூர் TASMAC Shop வந்து இருதுறை திடீர் சோதனை குழுவினரிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அப்போது அவரிடம் திடீர்சோதனை விவரம் தெரிவித்தும், நடக்கும் நிகழ்வுகளை கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படு, மதுபானக்கடை எண்.11340-ன் அவசியமாக பராமரிக்கப்பட வேண்டிய Form-III Cash Bill (Rule-16) பற்றி மேற்பார்வையாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் கேட்டபோது, அவ்வாறு எதுவும் பராமரிக்கப்படவில்லை என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. பராமரிக்கப்படும் ஆவணங்கள் பற்றி மேற்பார்வையாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் கேட்க அவர் Attendance Register, Daily Chitta, Empty Carton Register, Liability Register, Invoice, Daily Stock and Sales List, Form-V Stock cum Sale Register ஆகியவற்றை ஆஜர் செய்ததை பார்வையிட்டு வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் திரு.வினாயகம் மற்றும் திரு.ராஜேந்திரன் ஆகியோர் உதவியுடன் கடையின் மதுபான இருப்பு சரிபார்க்கப்பட்டு 29.10.2020 காலை நிலவரப்படி இருப்பில் உள்ள மதுபான வகைகளின் மதிப்பு ரு.47,15,900/-, என்பதையும் 29.10.2020 அன்று கொள்முதல் செய்யப்பட்ட மதுபானங்களின் மதிப்பு ரு.9,73,200/- என்பதையும் 29.10.2020 தினம் விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் மூலம் வரப்பெற்ற தொகை ரு.5,12,930/- என்பது கண்டறியப்பட்டது. டாஸ்மாக் கடை

எண்.11340 இருதுறை திடீர்சோதனை செய்தபோது, மதுபானக்கடையின் கல்லாவில் பணம் ரூ.5,27,650/- இருந்தது. மேற்படி தொகையில் விற்பனைத்தொகையான ரூ.5,12,930/- போக அதிகபடியாக ரூ.14,720/- இருந்தது. மேற்படி கூடுதலாக இருந்த தொகை பற்றி மேற்பார்வையாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் விசாரித்து அத்தொகை பீர் மற்றும் குவார்ட்டர் பாட்டில்களை விற்பனை செய்யும்போது அரசு நிர்ணயம் செய்த விலையை விட கூடுதலாக பீர் பாட்டிலுக்கு ரூ.10/-ம், குவார்ட்டர் பாட்டிலுக்கு ரூ.5/- அதிகப்படியான விலை வைத்து விற்பனை செய்த வகையில் கிடைக்கப்பெற்ற பணம் என்பதை ஊர்ஜிதம் செய்யப்பட்டு பீர் மற்றும் குவார்ட்டர் பாட்டில்களை விற்பனை செய்யும்போது அரசு நிர்ணம் செய்த விலையை விட கூடுதலாக அதிகப்படியான விலை வைத்து விற்பனை செய்த வகையில் லஞ்சமாக கிடைக்கப்பெற்ற பணம் ரூ.14,720/-ஐ வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது.

2. பின்னர் மதுபானக்கடை எண்.11120-யில் இருதுறை திடீர் சோதனை செய்ய, மதுபான விற்பனை கடையின் விற்பனையாளர்கள் திரு.K.ருத்ரமூர்த்தி மற்றும் A.சத்யகுமார், தனி நபர் திரு.டில்லி (எ) டில்லி குமார் ஆகியோர் ஆஜரில் இருந்தனர் இரவு சுமார் 23.30 மணிக்கு கடையின் மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி கடைக்கு வந்து சேர்ந்தார். மேலும், மதுபான விற்பனை கடை எண்.11120-ன் கல்லாவை சோதனை செய்ய, அதில் பணம் இருந்தது. அது குறித்து மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி அவர்களிடம் விசாரிக்க, அந்த பணம் மதுபாட்டில்களை விற்பனை செய்த வகையில் வரப்பெற்ற பணம் என்று சொன்னார். மேற்படி கடை எண்.11120-ன் அவசியமாக பராமரிக்கப்பட வேண்டிய Form-III Cash Bill (Rule-16) பற்றி மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி அவர்களிடம் கேட்டபோது, அவ்வாறு எதுவும் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார். பின்னர், மதுபானக்கடை எண்.11120-ல் பராமரிக்கப்படும் ஆவணங்கள் பற்றி மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி அவர்களிடம் கேட்க, அவர் Attendance Register, Daily Chitta, Empty Carton Register, Liability Register, Invoice, Daily Sales and Stock Register, Form-V Stock cum Sale Register ஆகிய ஆவணங்களை ஆஜர் செய்ததை பார்வையிட்டு வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.பாஸ்கரன் ஆகியோர் உதவியுடன் கடையின் மதுபான இருப்பு சரிபார்க்கப்பட்டதில் 29.10.2020 காலை நிலவரப்படி அரசு மதுபானக்கடை எண்.11120-ல் இருப்பில் உள்ள மதுபான வகைகளின் மதிப்பு ரூ.52,77,960/- என்பதையும், 29.10.2020 அன்று கொள்முதல் செய்யப்பட்ட மதுபானங்களின் மதிப்பு ரூ.10,51,440/- என்பதையும் 29.10.2020 விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் மூலம் வரப்பெற்ற தொகை ரூ.7,89,270/-ம் கண்டறியப்பட்டது. டாஸ்மாக் கடை எண்.11120 இருதுறை திடீர்சோதனை செய்தபோது, மதுபானக்கடையின் கல்லாவில் பணம் ரூ.4,03,540/- மட்டும் இருந்தது. மேற்படி

டாஸ்மாக் கடையின் விற்பனைத்தொகையான ரூ.7,89,270/-ல் குறைவாக இருந்த தொகை குறித்து விற்பனையாளர் திரு.K.ருத்ரமூர்த்தி அவர்களிடம் கேட்க, அவர் 30.10.2020 மிலாடிநபி பண்டிகை விடுமுறை தினம் என்பதால் கள்ளச்சந்தையில் மதுபானங்களை விற்பனை செய்யும் தொரப்பாடியை சேர்ந்த முருகன், சங்கரன்பாளையம் ரமேஷ், ஓட்டேரி பகுதியைச் சேர்ந்த பாஸ்கர் மற்றும் சிலருக்கு மொத்தமாக மதுபானங்களை கொடுத்துள்ளதாகவும் அதன் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை இக்கடையில் தனி நபராக மேற்பார்வையாளரால் பணி செய்ய அமர்த்தப்பட்டு வேலை செய்யும் டில்லி (எ) டில்லி குமார் என்பவர் மூலம் வெளியே வைக்கப்பட்டிருந்த தொகை தனி நபர் டில்லி (எ) டில்லி குமார் என்பவர் மூலம் ஆஜர் கத்தையாக ஆஜர் செய்த பணத்தை பெற்று எண்ணிப் பார்க்க ரூ.4,20,000/- இருந்தது. மேற்படி மதுபானக்கடையில் ஏற்கனவே இருந்த தொகையான ரூ.4,03,540/-வுடன் சேர்த்து அதனை எண்ணிப் பார்க்க, ரூ.8,23,540/- இருந்தது. 29.10.2020 விற்பனை தொகையான ரூ.7,89,270/-விட கூடுதலாக ரூ.34,270/- இருந்தது. அது குறித்து கடையின் மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி மற்றும் விற்பனையாளர்களிடம் விவரம் கேட்க, அவர்கள் பீர் மற்றும் குவார்ட்டர் பாட்டில்களை விற்பனை செய்யும்போது அரசு நிர்ணம் செய்த விலையை விட கூடுதலாக பீருக்கு ரூ.10/-ம், குவார்ட்டர் பாட்டிலுக்கு ரூ.5/- அதிகப்படியான விலை வைத்து விற்பனை செய்த வகையில் கிடைக்கப்பெற்ற பணம் என்று சொன்னார்கள். மேலும், பீர் மற்றும் குவார்ட்டர் பாட்டில்களை விற்பனை செய்யும்போது அரசு நிர்ணயம் செய்த விலையை விட கூடுதலாக அதிகப்படியான விலை வைத்து விற்பனை செய்த வகையில் கிடைக்கப்பெற்ற லஞ்ச பணம் ரூ.34,270/-ம் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 29.10.2020-ஆம் தேதி இரவு 20.00 மணிக்கு துவக்கி 30.10.2020 காலை 07.00 மணிக்கு முடிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர்சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், திருமதி.D.R.கீதாராணி, மாவட்ட மேலாளர், டாஸ்மாக், வேலூர், கடையின் மேற்பார்வையாளர்கள் திரு.V.சீனிவாசன், திரு.S.ருத்ரமூர்த்தி, விற்பனையாளர்கள் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகல் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், வேலூர் மற்றும் மதுபான விற்பனை கடைகளின் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது.

3. பென்னாத்தூர் மதுபானவிற்பனை கடை எண்.11340-ல் விற்பனை செய்யப்படும் மதுபான பாட்டில்களுக்கு அரசு நிர்ணயம் செய்த விற்பனை தொகையைவிட கூடுதல் தொகைக்கு விற்பனை செய்து பொதுமக்களிடம் இருந்து அதிகப்படியான தொகையை வசூல் செய்த மற்றும் தனி நபர்களை மதுபானகடையில் வேலைசெய்ய பணிக்கு அமர்த்திய மேற்பார்வையாளர் திரு.V.சீனிவாசன், விற்பனையாளர்கள், திரு.K.ஜோதி,

திரு.E.பாலமுருகன் ஆகியோர் மீதும், பென்னாத்தூர் மதுபானவிற்பனை கடை எண்.11120-ல் விற்பனை செய்யப்படும் மதுபான பாட்டில்களுக்கு அரசு நிர்ணயம் செய்த விற்பனை தொகையைவிட கூடுதல் தொகைக்கு விற்பனை செய்து பொதுமக்களிடம் இருந்து அதிகப்படியான தொகையை வசூல் செய்த மற்றும் மதுபானவகைகளை மொத்தமாக கள்ளசந்தையில் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை அதனுடன் கூடிய கூடுதல் தொகையை லஞ்சமாக வசூல் செய்த மற்றும் தனி நபர்களை எவ்வித அனுமதியும் உத்தரவும் இல்லாமல் மதுபான கடையில் வேலை செய்ய தனி நபர்களை பணியமர்த்தி முறையற்ற வகையில் தன்னுடைய பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்த மேற்பார்வையாளர் திரு.S.ருத்ரமூர்த்தி, விற்பனையாளர்கள் திரு.K.ருத்ரமூர்த்தி மற்றும் திரு.A.சத்யகுமார் ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், திடீர் சோதனையில் பென்னாத்தூர் கிராமத்தில் இயங்கிவரும் அரசு மதுபானவிற்பனை கடை எண்.11340 மற்றும் கடை எண்.11120 ஆகியவற்றில் இருந்து மதுபானங்களை அரசு நிர்ணயம் செய்த விலையைவிட கூடுதல் தொகைக்கு விற்பனை செய்த வகையிலும், கள்ளச்சந்தையில் மதுபானங்களை மொத்தமாக விற்பனை செய்த வகையிலும் 29.10.2020 அன்றைய மதுபான விற்பனை தொகையைவிட கூடுதலாக இருந்த காரணத்தால் கைப்பற்றப்பட்ட உரிய கணக்கு கூற இயலாத மற்றும் உரிமம் கோராத லஞ்சமாக பெற்ற பணம் ரு.34,270/- மற்றும் லஞ்சமாக பெற்ற பணம் ரு.14,720/- ஆக மொத்தம் ரு.48,990/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை குறித்த அசல் செயல்முறை ஆகியவற்றை தக்க நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxx (T.கிருஷ்ணமூர்த்தி) 30.10.2020 மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Inspector Tr.S.Vijay to receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 30.10.2020, DSP/VAC/Vellore.

Sir/Madam, received the complaint on 30.10.2020 at 16.30 hrs and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.11/2020, 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. on 30.10.2020 at 17.30 hrs against A-1 to A-6 mentioned in Col.No.7 of the FIR. Sd/- xxxxx (S.Vijay), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

30/10/2020
(S.VIJAY)
INS/VGA.C/VLR